அதேபோல, மக்கள்தொகை பரப்பளவிலும் பெரிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சிக்கென்று கொளப்பள்ளியில் ஒரு கால்நடை மருத்துவமனை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வரையில் எந்த ஓர் அரசும் செய்யாத அளவிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2011-2012 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 497 புதிய மருந்தகங்களைக் கட்டியுள்ளது. அதேபோல், 2012-2013 ஆம் ஆண்டில் 185 கட்டடங்கள்; மொத்தத்தில் ஏறக்குறைய 680 கட்டடங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் கட்டியுள்ளது. இது வரையில் எந்த ஓர் அரசின் சார்பிலும் இந்த அளவிற்குக் கட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்த இடத்திற்கு நம்முடைய கால்நடை பராமரிப்புத் துறையின் துணை இயக்குநர் அவர்களை அனுப்பி, அதனை ஆய்வு செய்து, அந்த இடத்திலே மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

குறைந்த விலை துணி ரகங்கள்

***46751—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 பிப்ரவரி 23]

(அ) கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் குறைந்த விலை துணி ரகங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையதினம் அகவை 67 காணும் மக்களின் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், சந்தனத் தமிழின் சிந்தனை ஊற்று; அன்னைத் தமிழகத்தின் அட்சயபாத்திரம்; விளக்க முடியாத எங்கள் விடிவானம்; 67-வது அகவையில் அடியெடுத்து வைக்கும் அரசியல் அதிசயம்; (மேசையைத் தட்டும் ஒலி) தடைகள் நொறுங்க, வணங்குகிறோம். ஆண்டுகள் 100 காண, காலமகளை வேண்டுகிறோம், கையெடுத்து யாசிக்கின்றோம். தமிழகம் செழிக்க மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் நீடூழி பல்லாண்டு வாழ வேண்டுமென்று பிரார்த்தித்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் குறைந்த விலை துணி ரகங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அடிப்படை விதிகளின்படி, தமிழ்நாட்டிலுள்ள பிரதம கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களை மட்டும் கொள்முதல் செய்து, விற்பனை செய்ய வழிவகை உள்ளது என்பதையும், நெசவாளர்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களை மட்டுமே கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து, குறைந்த விலையில் தரமான துணி ரகங்களை விற்பனை செய்து வருவதால், அவையே குறைந்த விலை துணிதான் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[2015 பிப்ரவரி 23

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: குறிப்பாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திலே கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிகள் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு, குறைந்த விலையிலே துணி ரகங்கள் மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே ஒரு சின்ன திருத்தம். இறக்குமதி செய்து என்பதற்குப் பதிலாக, கொள்முதல் செய்து என்று இருக்க வேண்டும். பிரசுரித்தது தவறு என்றால் அவர்களைக் கேட்க வேண்டும், தவறு என்னுடையது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். தனியார் துணிக் கடை நிறுவனங்கள் மாநகர மற்றும் நகர மையப் பகுதிகளில் மக்களை மலைத்துப்போகிற அளவிற்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேட்ட கேள்வியில் அப்படியேதான் இருக்கிறது. மூல வினாவில், “கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் விதமாக இன்னும் மலிவான துணி ரகங்களை இறக்குமதி செய்ய அரசு ஆவன செய்யுமா” என்று கேட்டிருக்கிறீர்கள். இங்கே சரியாகத்தான் இருக்கிறது. நீங்கள் சொல்வதைத்தான் தவறாகச் சொல்கிறீர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: அதை ஏற்றுக்கொள்கிறேன் என்று நான் முதலிலே சொல்லிவிட்டேன். இறக்குமதி என்பதற்குப் பதிலாக கொள்முதல் என்றுதான் இருக்க வேண்டும். மக்கள் பார்த்து மலைத்துப் போகிற அளவிற்கு தனியார் துணிக் கடை நிறுவனங்கள் பிரம்மாண்டமான show rooms-ஐ திறந்து வியாபாரத்தில் இலாபம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சிறிய நகரங்களில், மக்களுக்குத் தெரியாத இடங்களிலே கடைகளை நடத்தி வருவதால் வியாபாரத்தில் அபிவிருத்தி அடைய முடியாமலும், கைத்தறி நெசவாளர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள முடியாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு

2015 பிப்ரவரி 23]

அரசே தன்னுடைய செலவில் பிரம்மாண்டமான show rooms-ஐ திறந்து, மக்கள் மனமுவந்து பாராட்டுகிற வகையிலே குறைந்தவிலையிலும், தள்ளுபடி கொடுத்தும் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 133 விற்பனை மையங்கள் பல்வேறு மாவட்டங்களிலே இருக்கின்றன. அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் வந்து வாங்கிச் செல்லக்கூடிய வகையிலே குறிப்பிட்ட இடங்களிலே விற்பனை மையங்கள் அமைந்திருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இறக்குமதி பற்றிச் சொன்னார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய உற்பத்தியைப் பிரதானமாக வைத்து அனைத்து வகை துணி ரகங்களையும் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலே விற்பனை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், குறைந்த அளவிலே இலாபம் வைத்து விற்பனை செய்யக்கூடிய நிலையமாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் காலகட்டங்களிலேதான் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பிரதான விற்பனை மையங்கள் குறிப்பாக, சென்னை, கடலூர் மற்றும் அண்டை மாநில இடங்களில் அதாவது பாண்டிச்சேரி, பெங்களூரு, விஜயவாடா போன்ற பல்வேறு இடங்களிலே அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைக்கப்பட்டு மக்கள் சுலபமாக வந்து அணுகக்கூடிய வகையிலே வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தனியார் அதிக அளவிலே இங்கேயும் வந்து வாங்கலாம் என்ற நிலையிலே பல்வேறு கவர்ச்சிகரமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதாவது, கோ-ஆப்டெக்ஸில் குறிப்பிட்ட காலங்களிலே இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் என்ற திட்டம். வருடத்திற்கு 3 மாதங்கள், பேரறிஞர் பெருந்தகை

அண்ணா அவர்களுடைய பிறந்த நாளில் ஆரம்பித்து தொடர்ச்சியாக பொங்கல் தினம் வரை 30 சதவிகிதம் தள்ளுபடி விலையிலே மக்கள் வந்து துணி ரகங்களை வாங்கிச் செல்லக்கூடிய வகையிலே கோ-ஆப்டெக்ஸில் தள்ளுபடி வழங்கப்படுகிறது. அதைப்போல, 'தங்கமழை பரிசுத் திட்டத்தில்' வாடிக்கையாளர்களிடம் கேள்விகள் கேட்டு, அதில் பரிசு பெறக்கூடியவர்களுக்கு முதல் பரிசாக 110 வாடிக்கையாளர்களுக்கு 8 கிராம் தங்க நாணயமும், 110 நபர்களுக்கு ஆறுதல் பரிசாக 2 கிராம் தங்க நாணயமும் 11 மண்டலங்களிலும் வழங்கப்படுகிறது. இப்படி வாடிக்கையாளர்களும், மக்களும் வந்து வாங்கக்கூடிய வகையிலே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 15 தினங்களுக்கு முன்பாக, தனியாருக்கு இணையாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் on-line மூலமாக விற்பனை துவக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு அதிகமாக வெளி நாடுகளிலே உள்ளவர்கள்கூட கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் on-line-ல் புக் செய்து, பணம் செலுத்தி விற்பனை செய்யக்கூடிய அதிசயமும் நடைபெற்று வருகிறது. மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, தனியாருக்கும் மேலாக, அவர்கள் நம்மோடு ஈடுகொடுக்க முடியாத அளவிலே, அவர்களும், மற்றவர்களும் அதிசயிக்கக்கூடிய வகையிலே விற்பனை நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நீண்ட விளக்கத்திற்கு நன்றி. ஆனால், நடைமுறையில் வியாபாரம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற அளவிலே இல்லை என்பது கோ-ஆப்டெக்ஸ் குறித்த பரவலான கருத்து. அவர்களுடைய கருத்தைத்தான் நான் இங்கே வலியுறுத்தினேன். அரசே இப்படிப்பட்ட பிரம்மாண்டமான show rooms-ஐ திறந்து, வியாபார அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதை எனது ஆலோசனையாகவும், அன்பான வேண்டுகோளாகவும் நான் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் பிரம்மாண்டமான விற்பனை நிலையங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தீர்மானம் போட்டு, தங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களையும், கட்சியைச் சேர்ந்தவர்களையும், 'எங்கள் குடும்பத்திலே உள்ள அனைவரும், கோ-ஆப்டெக்ஸில் மட்டுமே, எங்களுக்குத் தேவையான அனைத்து ரகங்களையும் வாங்குவோம்' என்று ஓர் உறுதியை எடுத்துக்கொள்ளச் செய்தால் இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு, இவர்களைப் பின்பற்றி மற்ற பொது மக்களும் முன்வருவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

விளையாட்டு மைதானம்

***53582—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையிலுள்ள விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சு. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்று தினம் தினம் திட்டம் தந்து, தமிழகத்தை முன்னோடி மாநிலமாக ஆக்கிக் கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையிலுள்ள விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.